Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

1. "தமிழ்த்தென்றலாக" என அழைக்கப்படுபவர் யார்?

(A) நல்லாதனார்
(B) பாரதியார்
(C) திரு.வி.க.
(D) பாரதிதாசன்

2. பொருத்துக :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| சொல் | | பொருள் | |
| (a) | மழவன் | 1. | இளைஞன் |
| (b) | மள்ளன் | 2. | வீரன் |
| (c) | மழுங்குதல் | 3. | குறைதல் |
| (d) | மள்குதல் | 4. | கெடுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

3. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை அறிதல்

| உலை | | உளை | |
|---|---|---|---|
| (A) | உழைத்தல் | 1. | துன்பம் |
| (B) | சோறு | 2. | உள்ளம் |
| (C) | கொல்லன் உலை | 3. | பிடரிமயிர் |
| (D) | கேடு | 4. | அலைச்சல் |



Teachingninja.in

4. "நில்லா உலகம் புல்லிய நெறித்தே போல்" உவமையால் விளக்கும் பொருள் யாது?

(A) இரங்காமை
(B) நிலையாமை
(C) அழியாமை
(D) அழிவு

5. நீருக்குள் பாசி போல – பொருத்தமான வாக்கியத்தினை தேர்ந்தெடுக்க.

(A) தந்தை இறந்த செய்தி மனதை ஆழ துன்புறுத்தியது
(B) மாணிக்கமும் சிவாவும் யாருடனும் சேர்ந்து செயல்பட மாட்டார்கள்
(C) அறிவழகனும் தமிழ்ச்செல்வனும் உற்ற நண்பர்கள்
(D) ஆசிரியர் நடத்திய பாடம் நன்கு பதிந்தது

6. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) கரந்தை, கரத்தல், கரங்கள், கரகம்
(B) கரகம், கரங்கள், கரத்தல், கரந்தை
(C) கரங்கள், கரகம், கரந்தை, கரத்தல்
(D) கரத்தல், கரந்தை, கரகம், கரங்கள்

7. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) எழினி, எயில், எய்தல், எண்கு
(B) எயில், எழினி, எண்கு, எய்தல்
(C) எண்கு, எய்தல், எயில், எழினி
(D) எய்தல், எண்கு, எழினி, எயில்

8. "கான மயிலாட அது கண்டு

ஆடும் வான்கோழி போல" என்ற உவமைக்கு ஏற்ற தொடர் எது?

(A) நானும் மணியும் நல்ல நண்பர்கள்
(B) நான் கடின உழைப்பினை மேற்கொண்டாலும் மணியினை போல உயர முடியவில்லை
(C) மணியும் நானும் எச்செயலிலும் ஒன்றுபடுவது இல்லை
(D) நான் மிக உயர்ந்த நிலையை அடைவேன்



Teachingninja.in

9. வேர்ச்சொல்லை தெரிவு செய் : ஆண்ட

(A) ஆட்சி
(B) ஆள்
(C) ஆளல்
(D) ஆள்க

10. வேர்ச்சொல்லை தெரிவு செய் : ஓடிய

(A) ஓடினான்
(B) ஓடு
(C) ஓடுதல்
(D) ஓடி

11. பொருந்தாச் சொல்லைக் கண்டறி :

(A) உண்
(B) காண்
(C) பூண்
(D) கண்

12. குட்டித் திருவாசகம் எனும் அடைமொழியை கொண்ட நூல் யாது?

(A) நாலாயிர திவ்விய பிரபந்தம்
(B) நன்னூல்
(C) திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி
(D) தேவாரம்

13. "திருத்தொண்டர் மாக்கதை" எனும் அடைமொழியால் அழைக்கப்பெறும் நூல் யாது?

(A) பெரிய புராணம்
(B) கந்த புராணம்
(C) சீறாப்புராணம்
(D) அரிச்சந்திர புராணம்

14. 'சின்னூல்' என்ற அடைமொழி கொண்ட நூல் யாது?

(A) நேமிநாதம்
(B) திருவாசகம்
(C) முதற்பரணி
(D) இலக்கண விளக்கம்



Teachingninja.in

15. தவறான சொற்றொடரை நீக்குக.

(A) உடற்கல்வி பெற்று உடம்பை வளர்ப்போம்

(B) வா கடவுளே நீ வாருமே!

(C) நாம் பிறமொழியில் உள்ள நூல்களை நன்கு கற்க வேண்டும்

(D) தமிழர்கள் அறிந்தவர் வாழ்வின் இலக்கணம்

16. செய்வினைச் சொற்றொடரைக் கண்டறிக.

(A) கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது

(B) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்

(C) கட்டினான் கல்லணையைக் கரிகாலன்

(D) கரிகாலன் கல்லணையைக் கட்டுவார்

17. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல் :

(A) கிடைத்தால் வாய்ப்பு வானையும் எட்டுவாள் பெண்

(B) பெண் வாய்ப்பு கிடைத்தால் எட்டுவாள் வானையும்

(C) வாய்ப்பு கிடைத்தால் வானையும் எட்டுவாள் பெண்

(D) எட்டுவாள் வானையும் பெண் வாய்ப்பு கிடைத்தால்

18. பொருத்துக :

(a) Marand — 1. பவனி

(b) Marble — 2. சிற்பங்கள்

(c) March — 3. கெடு

(d) Mar — 4. குறைபாடு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |



Teachingninja.in

19. தோன்றுக – என்பதன் இலக்கணக் குறிப்பைத் தேர்க.

(A) தொழிற்பெயர்

(B) பண்புப்பெயர்

(C) பெயரெச்சம்

(D) வியங்கோள் வினைமுற்று

20. பிரித்தெழுதுக : நெடுநாவாய்

(A) நெடு + நாவாய்

(B) நெடிய + நாவாய்

(C) நீண்ட + நாவாய்

(D) நெடுமை + நாவாய்

21. பொருத்துக :

(a) நம்மாழ்வார் — 1. திருப்பல்லாண்டு

(b) பெரியாழ்வார் — 2. பெருமாள் திருமொழி

(c) திருமங்கையாழ்வார் — 3. திருவாய்மொழி

(d) குலசேகராழ்வார் — 4. சிறிய திருமடல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

22. கொடுக்கப்பட்டுள்ள செய்யுள் அடியில் அடிக்கோடிட்டச் சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்பைக் கண்டறிதல்

"சுரும்பிவர் சந்துத் தொடுகடல் முத்தும் வெண்சங்கு மெங்கும்"

(A) பண்புத்தொகை, எண்ணும்மை

(B) வினைத்தொகை, எண்ணும்மை

(C) வினைத்தொகை, முற்றும்மை

(D) பண்புப்பெயர், எண்ணும்மை



Teachingninja.in

23. ஓங்க – என்னும் வேர்ச்சொல்லின் வியங்கோள் வினைமுற்றை எழுதுக :

(A) ஓங்குக
(B) ஓங்கு
(C) ஓங்குதல்
(D) ஓங்கி

24. உழு – என்னும் வேர்ச்சொல்லின் வியங்கோள் வினைமுற்று எழுதுக.

(A) உழுதல்
(B) உழுக
(C) உழுதான்
(D) உழார்

25. கொடு – என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண் :

(A) கொடுத்தான்
(B) தொடுத்தான்
(C) எடுத்தான்
(D) கொடுத்தல்

26. ஒலி – என்னும் வேர்ச்சொல்லின் வியங்கோள் வினைமுற்றை எழுதுக.

(A) ஒலிக்க
(B) ஒலித்த
(C) ஒலித்து
(D) ஒலித்தல்

27. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) நீளம், நிலம், நாளம், நலம்
(B) நலம், நாளம், நிலம், நீளம்
(C) நாளம், நலம், நீளம், நீலம்
(D) நிலம், நீளம், நலம், நாளம்



Teachingninja.in

28. பட்டியல் I–ல் உள்ள சொற்களை பட்டியல் II–ல் உள்ள சொற்களின் பொருளை ஆய்ந்து குறியீடுகளைக் கொண்டு குறிக்கவும்.

| பட்டியல் I சொல் | | பட்டியல் II பொருள் | |
|---|---|---|---|
| (a) | மாயோன் | 1. | உன்னிடம் |
| (b) | மடங்கல் | 2. | குற்றம் |
| (c) | நின்வயின் | 3. | இயமனின் ஏவலன் |
| (d) | செயிர் | 4. | கருநிறமுடையவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

29. போர்க்களம் பாடுதல் என்ற துறையைச் சார்ந்த புறநூல்

(A) திணைமாலை

(B) களவழி நாற்பது

(C) கார்நாற்பது

(D) ஏலாதி

30. கடன்பட்டார் நெஞ்சம் போல் ——————

(A) மகிழ்ச்சி

(B) இன்பம்

(C) கலக்கம்

(D) துன்பமின்மை

31. "பகலவனைக் கண்ட பனி போலாயிற்று துன்பம்" ——————

(A) வீழ்ந்தது

(B) மறைந்தது

(C) உடன் நீங்கியது

(D) கலந்தது



Teachingninja.in

32. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பண்டிதமணி கதிரேசச் செட்டியார் | 1. | பழந்தமிழ் நாகரிகம் |
| (b) | காசு பிள்ளை | 2. | காவிய காலம் |
| (c) | மறைமலையடிகள் | 3. | உதயண சரிதம் |
| (d) | எஸ். வையாபுரிப்பிள்ளை | 4. | அறிவுரைக் கொத்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

33. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திரு.வி.க. | 1. | சேரன் செங்குட்டுவன் |
| (b) | மு. இராகவையங்கார் | 2. | புவி எழுபது |
| (c) | இரா. இராகவையங்கார் | 3. | பைபிள் மொழிபெயர்ப்பு |
| (d) | ஆறுமுக நாவலர் | 4. | இளமை விருந்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |



Teachingninja.in

34. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) உழிஞை, உய்த்து, உஞற்று, உகிர்

(B) உய்த்து, உழிஞை, உகிர், உஞற்று

(C) உஞற்று, உகிர், உழிஞை, உய்த்து

(D) உகிர், உஞற்று, உய்த்து, உழிஞை

35. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) தெளிவு, துகள், தாழை, தளை

(B) தளை, தாழை, துகள், தெளிவு

(C) தாழை, தளை, தெளிவு, துகள்

(D) துகள், தெளிவு, தளை, தாழை

36. நூல்களை நூலாசிரியர்களோடு பொருத்துக :

| I நூல் | | II நூலாசிரியர் | |
|---|---|---|---|
| (a) | வேங்கையின் மைந்தன் | 1. | நா. பார்த்தசாரதி |
| (b) | துளசிமாடம் | 2. | பிரபஞ்சன் |
| (c) | ராஜபேரிகை | 3. | அகிலன் |
| (d) | மகாநதி | 4. | சாண்டில்யன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |



Teachingninja.in

37. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

'பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்'

(A) பொறுத்தவர் யார்?

(B) பொறையெனப்படுவது எது?

(C) இகழ்வாரைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமா?

(D) பொறுத்துக் கொள்வதால் வரும் நன்மை என்ன?

38. மதுரகவி என அழைக்கப்பட்டவர் யார்?

(A) தில்லையாடி வள்ளியம்மை

(B) மதுரை கூடலூர்கிழார்

(C) கணியன் பூங்குன்றனார்

(D) பாஸ்கரதாஸ்

39. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :

'மன்னுயிர்க் கெல்லாம் வரம் மரம்தாள்'

(A) மன்னுயிரின் பயன் என்ன?

(B) மன்னுயிர்க்கு வரம் எது?

(C) மரம் எதற்கு பயன்படுகிறது?

(D) மரம் வரமாகுமா?

40. கீழ்க்கண்ட சொற்களுள் எது <u>எதிர்ச்சொல் இல்லை</u>?

(A) எண்பொருள் × நுண்பொருள்

(B) கடைக்கொட்க × இடைக்கொட்க

(C) ஊறு × துன்பம்

(D) முகம்நக × அகம்நக

41. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :

"கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்"

(A) கீழல்லவர் யார்?

(B) கீழிருந்தும் கீழல்லார் யார்?

(C) கீழல்லாரின் நிலை என்ன?

(D) கீழல்லார் எப்படிப்பட்டவர்?



Teachingninja.in

42. “எள்ளற்க என்றும் எளியர் என்று எண்பெறினும்” – இத்தொடரில்

(A) சீர்மோனை வந்துள்ளது

(B) முற்றுமோனை அமைந்துள்ளது

(C) முற்றுமோனை அமையவில்லை

(D) சீர் எதுகை வந்துள்ளது

43. பட்டியல் I–ல் உள்ள சொற்களைப் பட்டியல் II–ல் உள்ள இலக்கணக் குறிப்புகளிலிருந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I சொற்கள் | | பட்டியல் II இலக்கணக் குறிப்பு | |
|---|---|---|---|
| (a) | மலையுச்சி | 1. | பண்புத்தொகை |
| (b) | நல்லறம் | 2. | வினையாலணையும் பெயர் |
| (c) | தொழுதோர் | 3. | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| (d) | கரைகண்ட | 4. | ஆறாம் வேற்றுமைத்தொகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

44. “தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று” – இக்குறளில் அமைந்துள்ளது எது அடி எதுகை?

(A) தோன்றின் – தோன்றுக

(B) தோன்றின் – தோன்றலின்

(C) தோன்றலின் – தோன்றாமை

(D) புகழொடு – தோன்றுக



Teachingninja.in

45. "ஈன்று புறந் தருதல் என்தலைக் கடனே

சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" – இப்பாடலில் அமைந்துள்ள தொடைகளின்படி சரியான விடையைச் சுட்டுக.

(A) அடி எதுகை வந்துள்ளது

(B) சீர் எதுகை வந்துள்ளது

(C) அடிஇயைபு வந்துள்ளது

(D) அடி எதுகையும் அடிஇயைபும் வந்துள்ளன

46. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) புறா – குறுகுறுக்கும்

(B) பன்றி – கத்தும்

(C) வண்டு – இரையும்

(D) ஆந்தை – அலறும்

47. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) ஏடகம் – பண்டாரம்

(B) மகால் – மனை

(C) ஆறு – வழி

(D) மருங்கு – இடை

48. கீழ்க்குறிப்பிட்ட பாடலில் உள்ள சொற்களுள் எது சரியான எதிர்ச்சொல்?

ஆழிவடி அம்புஅலம்ப நின்றானும் அன்றொருகால்

ஏழிசைநூல் சங்கத்து இருந்தானும் – நீள்விசும்பின்

(A) ஆழி × வடி அம்பு

(B) ஆழி × விரும்பின்

(C) நின்றானும் × நீள் விசும்பின்

(D) இருந்தானும் × அன்றொரு நாள்

49. எது எதிர்ச்சொல் இல்லை?

(A) அகத்திரட்டு × புறத்திரட்டு

(B) கடைக்கொட்க × கடைசியில்

(C) அகச்சான்று × புறச்சான்று

(D) ஏற்புரை × மறுப்புரை



Teachingninja.in

50. வேர்ச்சொல்லை தெரிவு செய் : தேடிய

(A) தேடுதல்
(B) தேடி
(C) தேடு
(D) தேடியவன்

51. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க

(A) பரிட்சை பயம் பிரச்சினையா?
(B) தேர்வு அச்சம் சிக்கலா?
(C) தினசரி சிகிச்சைக்குச் சிபாரிசு
(D) நாள்தோறும் சிகிச்சைக்குப் பரிந்துரை

52. பொருத்துக (இலக்கணக் குறிப்பு)

(a) ஊர் நீங்கினான் — 1. ஏழாம் வேற்றுமைத்தொகை
(b) வளவன் சட்டை — 2. நான்காம் வேற்றுமைத்தொகை
(c) வேலன் மகன் — 3. ஆறாம் வேற்றுமைத்தொகை
(d) குகைப்புலி — 4. ஐந்தாம் வேற்றுமைத்தொகை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

53. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

"ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை"

(A) ஓதலைக் காட்டிலும் சிறந்தது எது?
(B) ஒழுக்கமுடைமை எவ்வளவு சிறப்புப் பெற்றது?
(C) எதனை ஓத வேண்டும்?
(D) ஓதுவது சிறப்புடைத்தா?



Teachingninja.in

54. பொருத்துக :

எடுத்துக்காட்டுகளுடன் இலக்கணத்தைப் பொருத்துக் :

| இலக்கணம் | | எடுத்துக்காட்டு | |
|---|---|---|---|
| (a) | இடக்கரடக்கல் | 1. | நிலம் |
| (b) | குழூஉக்குறி | 2. | கால் கழுவி வந்தான் |
| (c) | மங்கலம் | 3. | பறி |
| (d) | இலக்கணமுடையது | 4. | இறைவனடி சேர்ந்தார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

55. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க :

(A) முன்னோர் இயற்றி தந்த இலக்கிய செல்வங்களை போற்றித் துய்ப்போம்

(B) இயற்கைப் பிரிவுகள் செயற்கைப் பிரிவுகளாய்த் தீமை விளைத்தலைக் கண்டார்

(C) இயற்கைப் பிரிவுகள் செயற்கைப் பிரிவுகளாய் தீமை விளைத்தலை கண்டார்

(D) இயற்கைப் பிரிவுகள் செயற்கை பிரிவுகளாய்த் தீமை விளைத்தலைக் கண்டார்

56. வேர்ச்சொல்லை தெரிவு செய் : நல்கிய

(A) நல்கினர்

(B) நல்கு

(C) நல்கி

(D) நல்கிய



Teachingninja.in

57. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க :

ஊமை கண்ட கனவு போல

(A) ஏமாற்றம்

(B) தவிப்பு கூற இயலாமை

(C) வேதனை

(D) துன்பம் கண்டு உருகுதல்

58. 'விளம்பல்' என்ற பெயர்ச்சொல்லின் வகை அறிக.

(A) காலப்பெயர்

(B) சினைப்பெயர்

(C) குணப்பெயர்

(D) தொழிற்பெயர்

59. வேர்ச்சொல் தெரிவு செய் :

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ

தஞ்சல் அறிவார் தொழில்

(A) அஞ்சல்

(B) அஞ்சு

(C) அஞ்சாமை

(D) அஞ்சுவது



Teachingninja.in
Teachingninja.in

60. Sandal – என்ற ஆங்கிலச்சொல்லுக்கான பொருள் கீழ்க்காணும் விடைகளில் எது தவறானது?

(A) பாதரட்சை
(B) செருப்பு
(C) சந்தனமரம்
(D) மணல்

61. செயப்பாட்டு வினைச் சொற்றொடரைக் கண்டறிக :

(A) இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினான்
(B) தஞ்சைப் பெரிய கோயில் இராசராசனால் கட்டப்பட்டது
(C) தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினான் இராசராசன்
(D) இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டுவார்

62. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல் :

பாரதியை எல்லோரும் போற்றுவர் – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

(A) செய்வினை வாக்கியம்
(B) எதிர்மறை வாக்கியம்
(C) உடன்பாட்டு வாக்கியம்
(D) கட்டளை வாக்கியம்

63. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.

(A) மாதவி நடனம் கற்பித்தாள்
(B) மாதவி நடனம் கற்றாள்
(C) நடனம் மாதவியால் கற்கப்பட்டது
(D) மாதவி நடனம் கல்லாள்

64. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக.

(A) பூவிழி பெரியபுராணம் பயிற்றுவித்தாள்
(B) பூவிழி பெரியபுராணம் பயின்றாள்
(C) பெரியபுராணம் பூவிழியால் பயிலப்பட்டது
(D) பூவிழி பெரியபுராணம் பயிலாள்



Teachingninja.in

65. கொடுக்கப்பட்டுள்ள குறட்பாவில் அடிக்கோடிட்டச் சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்புகள் தேர்க :

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு.

(A) பெயரெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர்

(B) வினையெச்சம், வினையெச்சம், வினைமுற்று

(C) வினையெச்சம், வினையெச்சம், பண்புப்பெயர்

(D) வினையெச்சம், வினையெச்சம், தொழிற்பெயர்

66. Wa'ger – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கீழ்க்காணும் விடைகளில் சரியானது எது?

(A) பந்தயம்

(B) பந்தயப்பொருள்

(C) பந்தயம் கட்டு

(D) கூலி வாங்குபவர்

67. மொழிக்கு இறுதியாக வரும் சரியான மெய்யெழுத்து தொடரை குறிப்பிடுக :

(A) ட், ற், ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ்

(B) ஞ், ண், ந், ம், ண், ய், ர், ல், வ், ழ், ள்

(C) க், ச், ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ்

(D) ஞ், ண், ந், ம், ண், ய், ர், ல், ற், ழ், ள்

68. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

(A) பிறர்தர வாரா நன்றும் தீதும்

(B) நன்றும் தீதும் பிறர்தர வாரா

(C) தீதும் நன்றும் பிறர்தர வாரா

(D) பிறர் தீதும் நன்றும் தர வாரா



Teachingninja.in

69. செயப்பாட்டு வினைச் சொற்றொடரைக் கண்டறிக :

(A) மூவேந்தர்கள் முத்தமிழை வளர்த்தனர்
(B) முத்தமிழ் மூவேந்தர்களால் வளர்க்கப்பட்டது
(C) வளர்த்தனர் முத்தமிழை மூவேந்தர்கள்
(D) மூவேந்தர் முத்தமிழை வளர்ப்பார்

70. பொருந்தா இணையைக் கண்டறிக :

(A) அரும்பு – மொட்டு
(B) முகை – மலர்
(C) அரிவை – தெரிவை
(D) அலர் – வீ

71. பகுபத உறுப்பிலக்கணம் அமைப்புப்படி பின்வரும் சொற்களில் தவறான பிரித்தறிதலை கண்டறிக.

(A) புகலீர் = புகல் + ஈர்
(B) காணீர் = காண் + ஈர்
(C) புக்கேன் = புக்கு + ஏன்
(D) முறிவற = முறிவு + அற

72. நூல்களோடு நூலாசிரியர்களைப் பொருத்துக :

| I நூல் | | II நூலாசிரியர் | |
|---|---|---|---|
| (a) | மானுடம் வெல்லும் | 1. | இந்திரா பார்த்தசாரதி |
| (b) | மெர்க்குரிப் பூக்கள் | 2. | இராஜம் கிருஷ்ணன் |
| (c) | வேருக்கு நீர் | 3. | பிரபஞ்சன் |
| (d) | குருதிப்புனல் | 4. | பாலகுமாரன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |



Teachingninja.in

73. "பிடிபயின்று தரூஉம் பெரும் களிறு போலத்"

இதில் வரும் வினையெச்சம் எது?

(A) பிடி

(B) பயின்று

(C) பெரும்

(D) களிறு

74. சா – என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றை தேர்ந்தெடுக்க.

(A) செத்து

(B) செத்தான்

(C) செத்தவன்

(D) சாதல்

75. நிலத்துக்குரிய உரிப்பொருள் அமைந்த விடையைக் குறிப்பிடுக :

| | நிலம் | | உரிப்பொருள் |
|---|---|---|---|
| (a) | மலை | 1. | ஊடல் |
| (b) | காடு | 2. | இரங்கல் |
| (c) | வயல் | 3. | புணர்தல் |
| (d) | கடல் | 4. | இருத்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |



Teachingninja.in

76. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :

"சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி

ஈர்த்திட்டுயர் துலைதான் ஏறினான்"

(A) புறாவின் நிறைக்கு ஈடாக அரசன் என்ன செய்தான்?

(B) புறாவின் செயல் என்ன?

(C) திருமேனி ஈர்த்து என் செய்தான்?

(D) துலாக்கோலில் ஏறியதால் விளைந்த பயன் என்ன?

77. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :

"முதல் இலார்க்கு ஊதியம் இல்"

(A) முதலீடு இல்லாதவருக்கு எது கிடைக்காது?

(B) முதல் இல்லாதவர் யார்?

(C) ஊதியம் யாருக்கு வழங்க வேண்டும்?

(D) இல் என்றால் என்ன?

78. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பம்மல் சம்பந்த முதலியார் | 1. | ரூபாவதி |
| (b) | சங்கரதாஸ் சுவாமிகள் | 2. | இராமநாடகம் |
| (c) | பரிதிமாற் கலைஞர் | 3. | சபாபதி, லீலாவதி |
| (d) | அருணாசலக் கவிராயர் | 4. | அபிமன்யு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |



Teachingninja.in

79. பிரித்தெழுதுக : பச்சூன்

(A) பச்சை + ஊன் (B) பசுமை + ஊன்

(C) பசு + ஊன் (D) பசிய + ஊன்

80. பிரித்தெழுதுக : பெரியன்

(A) பெரிய + அன் (B) பெரும் + அன்

(C) பெருமை + அன் (D) பெரு + அன்

81. பகுபத உறுப்பிலக்கணம் அமைப்புப்படி பின்வரும் சொற்களில் சரியான பிரித்தறிதலை கண்டறிக :

வாழ்த்துவம்

(A) வாழ் + வ் + அம் (B) வாழ் + த் + வ் + அம்

(C) வாழ்த்து + வ் + அம் (D) வாழ்த்து + உ + வ் + அம்

82. பொருத்துக :

(a) அகிலன் 1. கோபல்லபுரம்

(b) ஜெயகாந்தன் 2. சித்திரப்பாவை

(c) கி. ராஜநாராயணன் 3. அலையோசை

(d) கல்கி 4. சில நேரங்களில் சிலமனிதர்கள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |



Teachingninja.in

83. ஆதிசங்கரர் இவரைத் 'திராவிட சிசு' என்றார்

(A) திருநாவுக்கரசர்
(B) திருமழிசையாழ்வார்
(C) திருஞானசம்பந்தர்
(D) திருப்பாணாழ்வார்

84. பகுபத உறுப்பிலக்கணம் அமைப்புப்படி பின்வரும் சொற்களில் சரியான பிரித்தறிதலை கண்டறிக.

(A) ஆர்த்த = ஆர் + த் + த் + அ
(B) பெய்த = பெய் + த் + த் + அ
(C) அசைத்த = அசை + த் + அ
(D) செய்த = செய் + த் + த் + அ

85. "நாடக உலகின் இமயமலை" யார்?

(A) பரிதிமாற்கலைஞர்
(B) கந்தசாமி
(C) பம்மல் சம்மந்த முதலியார்
(D) சங்கரதாஸ் சுவாமிகள்

86. "எனைத்தானும் நல்லவை கேட்க, அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்" – இக்குறளில்

1. சீர் எதுகை வந்துள்ளது.
2. சீர் இயைபு வந்துள்ளது.
3. இரண்டாவது அடியில் மட்டும் சீர் எதுகை வந்துள்ளது – இக்கூற்றுகளில்

(A) ஒன்றும் இரண்டும் சரியானது
(B) இரண்டும் மூன்றும் சரியானது
(C) மூன்றாவது மட்டும் சரியானது
(D) ஒன்றாவது மட்டும் சரியானது



Teachingninja.in

87. எதுகைத் தொகையின் இலக்கணம்

(A) முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது

(B) இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது

(C) முதலிரண்டு எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது

(D) முதலெழுத்து அளவொத்து இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது

88. பின்வருவனவற்றுள் எது மோனை இல்லை?

(A) குணமென்னும் – குன்றேறி

(B) குணமென்னும் – கணமேயும்

(C) கணமேயும் – காத்தல்

(D) குன்றேறி – நின்றார்

89. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு" – பின்வருவனவற்றுள் காய்ச்சீர் எது?

(A) எழுத்தெல்லாம்

(B) ஆதி

(C) பகவன்

(D) முதற்றே

90. கொடுக்கப்பட்டுள்ள குறட்பாவில் அடிக்கோடிட்டச் சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்புகள் தேர்க :

கற்றில <u>னாயினும்</u> <u>கேட்க</u> அஃதொருவற்(கு)

ஒற்கத்தின் <u>ஊற்றாந் துணை</u>

(A) இழிவு சிறப்பும்மை, வியங்கோள் வினைமுற்று, முதனிலைத் தொழிற்பெயர்

(B) எண்ணும்மை, பண்புப்பெயர், வியங்கோள் வினைமுற்று

(C) தொழிற்பெயர், பண்புப்பெயர், வினைத்தொகை

(D) முற்றும்மை, முதனிலைத் தொழிற்பெயர், எதிர்மறை வினைமுற்று



Teachingninja.in

91. பெயர்ச்சொல்லின் வகையறிதல் 'முக்கண்ணன்'

(A) இடுகுறிப்பெயர்

(B) காரணப்பெயர்

(C) காரண இடுகுறிப்பெயர்

(D) காரண சிறப்புப்பெயர்

92. ஒருமை – பன்மை பிழைகளற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

(A) நீ சிறந்தவன் அல்ல

(B) நீ சிறந்தவன் அன்று

(C) நீ சிறந்தவன் அல்லை

(D) நீ சிறந்தவன் இல்லை

93. பெயர்ச்சொல்லின் வகையறிதல் : கழல் பணிந்தான்

(A) சினையாகுபெயர்

(B) காலவாகுபெயர்

(C) உவமையாகுபெயர்

(D) தானியாகுபெயர்

94. Ancestor – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) எதிர்ப்பாளர்

(B) வினா எழுப்புபவர்

(C) கோரிக்கையாளர்

(D) முன்னோர்

95. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) அனல் – அனலா

(B) காயல் – போக்

(C) மயில் – மயூரா

(D) அரிசி – ஓரைஸா

96. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

"இழப்பினும் பிற்பயக்கும் நற்பால்வை"

(A) இழப்பது எது?

(B) நற்பாலவை எப்பொழுது பயக்கும்?

(C) இழந்தாலும் பிற்பயப்பவை எவை?

(D) எவை பிற்பயக்கும்?



Teachingninja.in

97. ஒருமை – பன்மை பிழைகளற்ற வாக்கியங்களைக் கண்டறிக :

1. காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தது

2. காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தன

3. மாணவன் நல்லொழுக்கம் உடையவர்கள்

4. மாணவர்கள் நல்லொழுக்கம் உடையவர்கள்

(A) 1 & 3 (B) 2 & 3

(C) 1 & 4 (D) 2 & 4

98. சந்திப்பிழை இல்லாதத் தொடரைக் கண்டறிக.

(A) தமிழ்த் துறைப் பணியை விரும்பிப்கேட்டு ஏற்றவர் பரிதிமாற்கலைஞர்

(B) சென்னை கிறித்துவ கல்லூரியில் இளங்கலை பயின்றவர் பரிதிமாற்கலைஞர்

(C) தமிழ்ப்பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தவர் பரிதிமாற்கலைஞர்

(D) தமிழ்புலமையும் கவிப்பாடும் திறனும் கொண்டிருந்தார் பரிதிமாற்கலைஞர்

99. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டறிக : ‘விளி’

(A) அம்மையே (B) மகனே

(C) அன்னவர்க்கே (D) ஐயனே

100. இலக்கணக் குறிப்புச் சொல்லைத் தேர்க : முற்றும்மை

(A) யார்க்கும் (B) எனினும்

(C) ஊழையும் (D) கேட்பினும்



Teachingninja.in